அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 03/2025 (II)

எனது இலக்கம் : Pns/P4/W&OP/F11

பொது நிர்வாக, மாகாண சபைகள்

மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.07.21

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதமச் செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

மாவட்டச் செயலாளர்கள் / முப்படை தளபதிகள்/ பொலிஸ்மா அதிபர்
பிரதேச செயலாளர்கள்
உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள்

**<u>அரசாங்க உத்தியோகத்தர்கள் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய முறைமையில் பதிவு செய்தல் மற்றும் அவர்களின் பயனாளிகளின் தகவல்களை உறுதிப்படுத்தலை புதிய நிகழ்நிலை தகவல் முறைமையினூடாக செயற்படுத்தல்</u>.**

மேற்படி விடயம் தொடர்பாக 2025.01.20 ஆந் திகதிய வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2025 மற்றும் 2025.11.17 ஆந் திகதிய வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2025 (I) தொடர்பில் தங்களின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அதன் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நிகழ்நிலை தகவல் முறைமையின் ஊடாகப் பதிவு செய்தல், தகவல்களை இற்றைப்படுத்துதல் மற்றும் பயனாளிகளின் தகவல்களை உறுதிப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக வழங்கியிருந்த கால எல்லை 2026.02.28 திகதியுடன் முடிவடைந்தமையினால், மேற்படி தகவல் பொறிமுறையில் அவ் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த வசதியானது அன்றிலிருந்து முடக்கப்பட்டுள்ளது.

03. அவ்வாறிருந்தபோதிலும், 2026.02.28 ஆந் திகதிக்கு முன்னர் அவ் நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு இயலாமற் போன அரச நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இணைந்த ஓய்வூதிய முகாமைத்துவ முறைமையின் (Integrated Pensions Management System - iPMS) மூலம் எதிர்காலத்தில் வழங்கப்படும் சேவைகளுக்கு அடிப்படையாக அமையும் மூலத் தரவு முறைமையாக விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய

அங்கத்துவத்தினை உரித்தாக்கும் இம்முறைமை செயற்படுவதினால், அனைத்து அரச உத்தியோகத்தர்களையும் தரவு முறைமையினுள் உள்வாங்குவதன் அவசியம் தொடர்பாக கவனம் செலுத்தி, மேற்படி நிகழ்நிலை தகவல் முறைமை 2026.10.30 ஆம் திகதி வரை மீண்டும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

04. எனவே, தகவல் முறைமையில் பதிவு செய்தல், தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் பயனாளிகளின் தகவல்களை உறுதிப்படுத்துதல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் 2026.10.30 ஆம் திகதிக்குள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

05. தகவல் முறைமையில் குறைபாடுள்ள தரவுகள் உள்ளீடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளமையினால், அதற்குரிய சுற்றறிக்கைகள் தொடர்பான பணியாட்தொகுதியினரை முறையாக அறிவுறுத்துவதற்கும், முறைமையில் உள்ளீடு செய்யப்படும் தரவுகளின் செம்மை தன்மையினை பின்னர் கண்காணிப்பதற்கும் இயன்ற முறையில் பொருத்தமான கண்காணிப்பு வேலைத்திட்டமொன்றினை ஏற்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

06. மேலே 03, 04 ஆம் பந்திகளின் கீழ் குறிப்பிடப்பட்ட திருத்தங்களைத் தவிர அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2025 மற்றும் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2025 (I) இன் ஏனைய ஏற்பாடுகள் மாற்றமின்றி காணப்படும்

ஒப்பம்./ எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**பிரதிகள்** :

1. சனாதிபதிச் செயலாளர் - தகவலுக்காக
2. பிரதமரின் செயலாளர் - தகவலுக்காக
3. செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - தகவலுக்காக
4. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு - தகவலுக்காக
5. செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு - தகவலுக்காக
6. கணக்காய்வாளர் தலைமையதிபதி - தகவலுக்காக